# தேவர் யார்

குலம் தரும் செல்வம் தந்திடும்; அடியார் படுதுயராயினவெல்லாம்

நிலந்தரஞ் செய்யும்; நீள்  விசும்பு அருளும்; அருளொடு பெரு நிலமளிக்கும்

வலந்தரும்; மற்றுந்தந்திடும்; பெற்ற தாயினும் ஆயின செய்யும்

நலந்தரும் சொல்லை நாம்  கண்டுகொண்டோம்  நாராயணா என்னும் நாமம்!

புத்துலகம்

கண்ணனைப் போலன்பு கொண்டவர் வேறுள ரோ?

சாதி இரண்டொழிய வேறில்லையென்றே

தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்தமென்போம்.

திண்ணங் காணீர்! பச்சை
வண்ணன் பாதத் தாணை
எண்ணங் கெடுதல் வேண்டா!
திண்ணம். விடுதலை திண்ணம்.

# பாரதி

இவ்வுலகம் இனியது. வான் இனிமை யுடைத்து.

காற்றும் இனிது.

தீய் இனிது.  நீர் இனிது.  நிலம் இனிது.

ஞாயிறு  நன்று. திங்களும் நன்று.

வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.

மழை இனிது. மின்னல் இனிது.  இடி இனிது.

கடல் இனிது.  மலை இனிது.

காடு  நன்று. ஆறுகள் இனியன.

உலோகமும், மரமும், செடியும், கொடியும்,

மலரும் காயும், கனியும்  இனியன.

பறவைகள் இனிய.

ஊர்வனவும் நல்லன.

விலங்குகளெல்லாம் இனியன.

நீர்வாழ்வனவும் நல்லன.

மனிதர் மிகவும் இனியர்.

உடல் நன்று. புலன்கள் மிகவும் நன்று.

உயிர் சுவையுடையது.

மனம் தேன். அறிவு தேன். உணர்வு அமுதம்.

உணர்வே அமுதம்

உணர்வு தெய்வம்.

மனம் தெய்வம். சித்தம் தெய்வம். உயிர் தெய்வம்.

காடு, மலை, அருவி, ஆறு,

கடல், நிலம், நீர், காற்று,

தீய், வான்,

ஞாயிறு, திங்கள், வானத்துச் சுடர்கள் - எல்லாம்

தெய்வங்கள்.

உலோகங்கள், மரங்கள், ஊர்வன, நீந்துவன,

மனிதர் - இவை அமுதங்கள்.

எல்லா உயிரும் இன்பமெய்துக.

எல்லா உடலும் நோய் தீர்க.

எல்லா உணர்வும் ஒன்றாதலுணர்க.

தான் வாழ்க.

அமுதம் எப்போதும் இன்பமாகுக.

தெய்வங்களை வாழ்த்துகின்றோம்.

தெய்வங்கள் இன்பமெய்துக.

அவை வாழ்க.

அவை வெல்க.

தெய்வங்களே!

என்றும் விளங்குவீர். என்றும் இன்பமெய்துவீர்.

என்றும் வாழ்வீர். என்றும் அருள்புரிவீர்.

எவற்றையும் காப்பீர்.

காலம் வந்துகை கூடுமப் போதிலோர்
கணத்தி லேபுதி தாக விளங்குவான்
ஆல கால விடத்தினைப் போலவே
அகில முந்நு மசைந்திடச் சீறுவான்

வேரும் வேரடி மண்ணு மிலாமலே
வெந்து போகப் பகைமை  பொசுக்குவான்
பாரும் வானமு மாயிர மாண்டுகள்
பட்ட துன்பங் கணத்திடை மாற்றுவான்

கண்ண னெம்பெரு மானருள் வாழ்கவே!
கலி யழிந்து புவித்தவம் வெல்கவே!
அண்ண லின்னருள் நாடிய நாடுதான்
அவல நீங்கிப் புகழி லுயர்கவே!

## முரசு

அன்பென்று கொட்டு முரசே - மக்கள்
அத்தனை பேரும் நிகராம்.
இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு
யாவரு மொன்றெனக் கொண்டால்.

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் - இங்கு
வாழு மனிதரெல் லோர்க்கும்
பயிற்றி யுழுதுண்டு வாழ்வீர் - பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்.

அறிவை வளர்த்திட வேண்டும் - மக்கள்
அத்தனை பேருக்கு மொன்றாய்.
சிறியரை மேம்படச் செய்தால் - பின்பு
தெய்வ மெல்லோரையும் வாழ்த்தும்.

பாருக்குள் ளேசமத் தன்மை - தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்குந் தீமைசெய் யாது - புவி
யெங்கும் விடுதலை செய்யும்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழு மனிதருக் கெல்லாம்.
பயிற்றுப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

ஓன்றென்று கொட்டு முரசே - அன்பில்

ஓங்கென்று கொட்டு முரசே.

நன்றென்று கொட்டு முரசே - இந்த

நானில மாந்தருக் கெல்லாம்.

இளையபார தத்தினாய் வா வா வா

எதிரிலா வலத்தினாய் வா வா வா

ஒளியிழந்த நாட்டிலே - நின்றேறும்

உதயஞாயி றொப்பவே வா வா வா

களையிழைந்த நாட்டிலே - முன்போலே

களைசிறக்க வந்தனை வா வா வா

## பாரத ஸமுதாயம்

பாரத ஸமுதாயம் வாழ்கவே - வாழ்க  வாழ்க
பாரத ஸமுதாயம் வாழ்கவே ஜய  ஜய  ஜய

á ற்றி -

முப்பது கோடி ஜனங்களின் ஸங்க
முழுமைக் கும்பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை - வாழ்க

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும்பெரு நாடு
கனியுங் கிழங்கந் தானியங்களும்
கணக்கின்றித் தரு நாடு - இது
கணக்கின்றித் தரு நாடு - நித்தநித்தம்
கணக்கின்றித் தரு நாடு - வாழ்க

எல்லா உயிர்களிலும் யாமே யிருக்கிறோம்
என்றுரைத்தான் கண்ண பெருமான்
எல்லாரு மமரநிலை யெய்துநன்முறையை
இந்தியா உலகிற் களிக்கும் - ஆம்
இந்தியா உலகிற் களிக்கும் - ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்  - வாழ்க

எல்லோரு மோர்குலம் எல்லாரு மோரினம்

எல்லாரு மிந்திய மக்கள்

எல்லோரு மோர்நிறை எல்லாரு மோர்விலை

எல்லாரும் இந்நாட்டு மன்னர் - நாம்

எல்லாரும் இந்நாட்டு மன்னர் - ஆம்

எல்லாரும் இந்நாட்டு மன்னர் - வாழ்க

# வாழிய செந்தமிழ்

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!

வாழிய பாரத மணித்திரு நாடு!

இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!

நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!

அறம்வளர்ந் திடுக! மறமடி வுறுக!

ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றுஞ்

சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!

நந்தே யத்தினர் நாடொறும் உயர்க!

வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

## கண்ணன் பிறப்பு

கண்ணன் பிறந்தான் - எங்கள்
கண்ணன் பிறந்தான் - இந்தக்
காற்றதை யெட்டுத் திசையிலுங் கூறிடும்.
திண்ண முடையான் - மணி
வண்ண முடையான் - உயர்
தேவர் தலைவன் புவிமிசைத் தோன்றினன்.

பண்ணை யிசைப்பீர் - நெஞ்சிற்
புண்ணை யொழிப்பீர் - இந்தப்
பாரினி லேதுயர் நீங்கிடு மென்றிதை
எண்ணிடைக் கொள்வீர் - நன்கு
கண்ணை விழிப்பீர் - இனி
ஏதுங் குறைவில்லை; வேதந் துணையுண்டு.

## மனமே

கண்ணன் திருவடி எண்ணுக மனமே
திண்ணம் அழியா வண்ணந் தருமே.

தருமே நிதியும் பெருமை புகழும்
கருமா மேனிப் பெருமா னிங்கே.

இங்கே யமரர் சங்கந் தோன்றும்
மங்குந் தீமை பொங்கும் நலமே.

நலமே நாடிற் புலவர் பாடீர்
நிலமா மகளின் தலைவன் புகழே.

புகழ்வீர் கண்ணன் தகைசே ரமரர்
தொகையோ டசுரப் பகைதீர்ப் பதையே.

## எங்கள் நாடு

மாரத வீரர் மலிந்தநன்னாடு

மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன் னாடு

நாரத கான நலந்திகழ்நாடு

நல்லன யாவையு நாடுறுநாடு

பூரண ஞானம் பொலிந்தநன்னாடு

புத்தர் பிரானருள் பொங்கியநாடு

பாரத நாடு பழம்பெருநாடே

பாடுவ மி·.தை யெமக்கிலையீடே.

## மஹாத்மா காந்தி

வாழ்கநீ! எம்மான். இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்ம! நீ வாழ்க! வாழ்க!

அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி,
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்!

## புதிய கோணங்கி

நல்லகாலம் வருகுது. நல்லகாலம் வருகுது.

சாதிகள் சேருது. சண்டைகள் தொலையுது.

தரித்திரம் போகுது. செல்வம் வளருது.

படிப்பு  வளருது. பாவம் தொலையுது.

சாமிமார்க் கெல்லாம் தைரியம் வளருது.

தொப்பை சுருங்குது. சுறுசுறுப்பு விளையுது.

எட்டு லச்சுமியும் ஏறி வளருது.

பயந் தொலையுது. பாவந்  தொலையுது.

சாத்திரம் வளருது. சாதி குறையுது.

நேத்திரம் திறக்குது. நியாயம் தெரியுது.

பழைய பயித்தியம் படீலென்று தெளியுது.

வீரம் வருகுது. மேன்மை கிடைக்குது.

தர்மம் பெருகுது. தர்மம் பெருகுது.

## பிருந்தாவனக் கிருஷ்ணா

கண்ணா உனைப் போலே தெய்வம் உண்டோ
கண்ணனைக் காணாத கண்களும் உண்டோ
கண்ணனை வணங்காத உயிரும் உண்டோ
கண்ணனை வணங்காது உயர்வும் உண்டோ
கண்ணனுக் கிணையாக எதுவும் உண்டோ..

சிரித்தாடி மகிழ்வாக வாவா கண்ணா
குருவாயூர் பெருமானே வாவா மன்னா
பொன்வண்ணக் குழலூதி வாவா கண்ணா
வண்ணமயில் பிலி சூடி வாவா கண்ணா
அழகாக நடனமாடி வாவா கண்ணா
முழவெள்ளை மதியாக வாவா கண்ணா
மழைமேகக் குளிராக வாவா கண்ணா..

பூமகள் மகிழ்ந்திட
பூமணம் கமழ்ந்திட
நானிலம் வணங்கிட
நான்மறை புகழ்ந்திட
நன்மைகள் வழங்கிட
அச்சுதா கேசவா மாதவா யாதவா
ஆனந்த மோகனா கோவிந்தா
நீலவண்ணா நாராண நம்பி
ஜெயமளிப்பவா கிருஷ்ணா
ராமராகவா வாவா..

நாடு செழிக்க வேணும்
நல்ல மழை பெய்ய வேண்டும்

ஊரு செழிக்க வேணும்
உள்ளமெலாம் குளிர வேணும்

பட்டி பெருக வேணும்
பால்பானை பொங்க வேணும்

பாட்டு  சிறக்க வேணும்
பாரெல்லாம் உயர வேணும்

மக்கள் சிறக்க வேணும்
மங்கலம் நிலைக்க வேணும்

நெல்லு நீண்டு வளர வேண்டும்
தாமர உயர்ந்து மலர வேண்டும்

வானமும் பூமியும்
வாழ்வாங்கு வாழ வேணும்

நாளை நமதே;இந்த நாளும் நமதே

ஓம் நமோ நாராயணாய

# விக்ரமயூர்ஜிதசாஸனம்

ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் போற்றி!

ஆச்சார்யார்களின் அருந்தொண்டுகள் போற்றி!

குருபரம்பரை போற்றி!

வைணவப் பெரியோர்கள் போற்றி!

அடியார்கள் போற்றி!

அரங்கநகர் போற்றி!

ஆண்டாள் அம்மா போற்றி!

ஆழிசூழ் உலகு போற்றி!

அண்டரண்ட பகிரண்டங்கள் போற்றி!

உய்யவந்த விண்ணகரப்பெருமாளே போற்றி!